| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | தேனி | காலம் : | 19/06/2024 | முதல் | 23/06/2024 |
| | அறிக்கை எண் : | 049/ 2024 | வெளியீட்டு நாள் : | | 18/06/2024 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.06.2024முதல் 17.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-06-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/06 | 14/06 | 15/06 | 16/06 | 17/06 | தேதி | நாள்-1 19/06 | நாள்-2 20/06 | நாள்-3 21/06 | நாள்-4 22/06 | நாள்-5 23/06 |
| 0.3 | 0.8 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 5 | 3 | 2 | 2 | 26 |
| 39 | 38 | 38 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 33 | 33 | 32 | 32 |
| 26 | 26 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 21 | 21 | 20 |
| 5 | 5 | 5 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 7 | 6 | 8 |
| 69 | 65 | 64 | 58 | 65 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 46 | 49 | 39 | 58 | 51 | | 50 | 50 | 50 | 50 | 70 |
| 6 | 8 | 9 | 18 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 14 | 14 | 10 |
| வட மேற்கு | தென் கிழக்கு | வட மேற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (21 - 27 ஜூன் 2024):**

### மழைப்பொழிவு :

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 23 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**விவசாயம் :**

இந்த பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்ய திட்டமிடும் விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் தலா 1 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் கலந்து நிலப்பரப்பில் இடவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, காபி, கால்நடை.**

**வாழை:**

தற்போது வாழை பயிரில் வெட்டுப்புழு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலின் அறிகுறியாக இளம்புழுக்கள் இலைக்கு அடியில் இருந்து கொண்டு சுரண்டித் தின்னும். மேலும் இரவு நேரங்களில் இலைகளை அதிகமாக உண்ணும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 40மில்லி என்ற அளவில் பேசிலஸ் துரின்ஜியன்சிஸ் உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கவும்.

மேலும் வரப்புப் பயிராக செண்டுமல்லி பூப்பயிரினை 16:1 என்ற விகிதத்தில் பயிரிடுவது நல்ல பயனைக் கொடுக்கும்.

**காபி:**

**பருவமழைக்கு மத்தியில் உரமிடுதல்:**

காபி சாகுபடி செய்யும் விவசாயிகள், பருவமழைக்கு நடுவில் மழை இல்லாத நாட்களில் ஏக்கருக்கு 45 கிலோ யூரியா அல்லது 2 மூட்டை அம்மோனியம் சல்பேட் உடன் 25 கிலோ பொட்டாஷ் கலந்து அராபிக்கா மற்றும் ரொபஸ்டா வகை காபி பயிருக்கு இடுவதால் செடி நன்கு வளர்வதுடன் காயும் முதிர்வடையும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழலில் மாடுகளில் சப்பை நோய்; தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது. இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாகவும் உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது.

தொடை அல்லது முன்கால் சப்பை அல்லது கழுத்து போன்ற சதைப்பிடிப்புள்ள பகுதிகளில் வெப்பம் மிகுதியாகவும் வலியோடு கடினமான தன்மையுள்ள பெருத்த வீக்கமும் காணப்படும் தோலின் நிறம் கருப்பாக இருக்கும். இதன் காரணமாக மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும்.

நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப் தனியாக பிரித்துத் ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

நோய்க் கண்ட 24 மணி நேரத்திற்க்குள் உடனடியாக கால்நடை மருத்துவரின் உதவியுடன் மருத்துவம் செய்ய வேண்டும் இல்லையேல் மாடுகள் இறந்து விடும். ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே மாடுகளுக்குத் தடுப்பூசி போடுதல் அவசியம்.